

திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–74, பெரம்பூர் நெடுஞ்சாலை, ஜமாலியா பகுதியில் ரூ.9.64 கோடி மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் கட்டும் பணியினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (24.10.2025) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடி

# மருதிருவரின் நினைவை என்றும் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, அக்.25-**

**மருது சகோதரர்களின் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**

சிவகங்கைச் சீமையின் வீரத்துக்கு எடுத்துக்காட்டாக இம்மண்ணில் நிலைத்திருக்கும் மருது சகோதரர்கள் நினைவு நாள்.

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராடும் உணர்வை அந்நாளிலேயே விதைத்து, தலைசிறந்த தியாகிகளாகத் தூக்குக் கயிற்றை முத்தமிட்ட மருதிருவரின் நினைவை என்றும் போற்றுவோம்! இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாகத் தமிழர்கள் முன்னின்று உயிர் நீத்த வரலாற்றைத் தொடர்ந்து சொல்லுவோம்!

இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

## தகுதியின் அடிப்படையில் இருக்கவேண்டும்!

# குறிப்பிட்ட சாதியினருக்கே அர்ச்சகர் பணி என்பது கட்டாய மத நடைமுறை அல்ல!

## கேரள உயர்நீதி மன்றம் தீர்ப்பு!

திருவனந்தபுரம், அக். 25-

“அர்ச்சகர்கள் குறிப்பிட்ட சாதி அல்லது பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற கட்டாய மத நடைமுறை எதுவும் இல்லை” என்று கேரள உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

“தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் செய்வது அரசியலமைப்பு கூறும் சமத்துவத்தை உறுதி செய்யும். சாதிக்கும் பாரம்பரியத்திற்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது” என்றும் கூறியிருக்கும் நீதிபதிகள், இதுதொடர்பான விவகாரத்தில், அகில கேரள தந்திரி சமாஜம் (AKTS) தாக்கல் செய்த ரிட் மனுவையும் அதிரடியாக தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

2023-24ஆம் ஆண்டில் 75 பகுதிநேர சாந்திகள் (அர்ச்சகர்கள்) நியமன நடவடிக்கைகளை கேரள தேவ சம் ஆட்சேர்ப்பு வாரியம் (KDRB) மேற்கொண்டது. அப்போது பகுதிநேர சாந்திகளாக நியமிக்கப்படுவதற்கு, எஸ்எஸ்எல்சி கல்வித் தகுதியுடன், திருவாங் கூர் தேவசம் வாரியம் (TDB) மற்றும் கேரள தேவசம் ஆட் சேர்ப்பு வாரியத்தால் அங்கீகரிக்கப் பட்ட தந்திர வித்யா பீடங்கள் வழங்கும் அனுபவச் சான்றிதழ்கள் போதுமானது என்று அறிவித்திருந்தது.

பாரம்பரிய வேதப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் விடுபடுவார்கள் என்று தந்திரி சமாஜம் கவலை தெரிவித்தபோது, அந்த மாணவர்களும் விண்ணப்பிக்க அரசு அனுமதித்தது. எழுத்துத் தேர்வுக்கு கூடுதலாக, சடங்கு சம்பிரதாயங்கள் பற்றிய அறிவை மதிப்பீடு செய்து குறுகிய பட்டியல் தயாரிக்கப்பட்டது.

இதனிடையே, அர்ச்சகர் பணிக்கு ‘தந்திர வித்யாலயாக்கள்’ வழங்கும் அனுபவச் சான்றிதழை அங்கீ கரிக்கும் திருவாங்கூர் தேவசம் வாரியம் (TDB), கேரள தேவசம் ஆட்சேர்ப்பு வாரியம் ஆகியவற்றின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அகில கேரள தந்திரி சமாஜம் கேரள உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. இந்த மனு, நீதிபதிகள் வி.ராஜா விஜயராகவன், நீதிபதி கே.வி.ஜெயக்குமார் ஆகியோர் அடங்கிய இரண்டு நீதிபதிகள் அமர்வில் புதனன்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் கே.ஆர். ராஜ்குமார் உள்ளிட்டோர் ஆஜராகினர். “கேரளத்தில் உள்ள சுமார் 300 பாரம்பரிய தந்திரி குடும்பங்களை உள்ளடக்கிய பதிவுசெய்யப்பட்ட சங்கமான அகில கேரள தந்திரி சமாஜ மான தாங்கள் தான், தலைமுறை தலைமுறையாக அர்ச்சகர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். ஆனால் பாரம்பரிய தந்திரி சமூகம் உள்ளிட் டோரை ஆலோசிக்காமல் தந்திர வித்தியா பீடம் அங்கீகரிக்கப் பட்டு உள்ளது. தாந்ரீகக் கல்வியை வழங்கும் நிறுவனங்களை மதிப்பிடுவதற்கோ அல்லது அங்கீகரிப்பதற்கோ கேரள தேவசம் ஆட்சேர்ப்பு வாரியத்திற்கு நிபுணத்துவம் இல்லை” என்று அவர்கள் வாதங்களை வைத்தனர்.

திருவிதாங்கூர் தேவசம் வாரி யத்தின் சார்பில் வழக்கறிஞர் ஜி. பிஜு, கேரள தேவசம் ஆட்சேர்ப்பு வாரி யத்தின் சார்பில் வி.வி. நந்தகோபால் உள்ளிட்டோர் ஆஜராகினர். அவர்கள், “அர்ச்சகர் பணியில், ஒதுக்கப்பட்ட சமூகங்களிலிருந்து போதிய பிரதி நிதித்துவம் இல்லை என்பதையும், அவர்களை அர்ச்சகர் பணிக்கு தயார்ப்படுத்துவதற்கான பாடத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த அமைப்பு இல்லாததை கவனத்தில் கொண்டே தந்திரி கல்வியை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங் களின் பட்டியலை விரிவுபடுத்த முடிவு செய்தது.

புகழ்பெற்ற தந்திரிகளைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவின் மூலம், ஒரு வருட பாடத்திட்டத்தை வகுத்து பயிற்சி அளிக்கும் ‘தந்திர வித்யா பீடங்கள்’ போன்ற நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. கேரள தந்திரி சமாஜத்தால் பயிற்சி அளிக்கப்பட்டவர்களும், அர்ச்சகர் பணிக்கு விண்ணப்பிக்கவும் தேர்வு எழுதவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாரம்பரிய நடைமுறைகளை ஒழிக்காமல், அதேநேரத்தில் தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், இதனை எதிர்த்து மனுத்தாக்கல் செய்துள்ள அகில கேரள தந்திரி சமாஜம் என்பது முழுக்க முழுக்க பிராமணர்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டிருக்கும் அமைப்பாகும்.

அர்ச்சகர்கள் நியமனத்தை தங்களின் பரம்பரை பாத்தியதையாக கருதும் இந்த அமைப்பு, குறிப்பிட்ட பிரிவினரை அர்ச்சகர்களாக நிலைநிறுத்தும் நோக்கத்தின் அடிப்படையிலேயே மனுத்தாக்கல் செய்துள்ளது. தகுதியைக் கருத்தில் கொள்ளாமல், ஏழு தலைமுறைகளாக தாந்ரீக பூஜை செய்து வரும் தந்திரி குடும்பங்களுக்கே அர்ச்சகர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளதாக அவர்கள் கருதுகின்றனர்” என்று கேரள அரசுத் தரப்பில் வாதங்களை வைத்தனர்.

இந்த வாதங்கள் அனைத்தையும் கேட்ட நீதிபதிகள், “அர்ச்சகர்கள் நியமனத்திற்குத் தகுதிபெற ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதை, ஒரு அத்தியாவசிய மத நடைமுறை, சடங்கு அல்லது வழிபாட்டு முறையை வலியுறுத்துவதாகக் கருத முடியாது.

அரசியலமைப்பிற்கு முந்தைய காலத்திலிருந்தே எந்தவொரு வழக்கமோ அல்லது பழக்கவழக்கமோ இருந்தாலும், அது மனித உரிமைகள், கண்ணியம் அல்லது சமூக சமத்துவத்தின் அரசியலமைப்புக் கொள்கைகளை மீறுவதாகக் கண்டறியப்பட்டால், அதனை அங்கீகரிக்க முடியாது.

அடக்குமுறையான, தீங்கு விளைவிக்கும், பொதுக் கொள்கைக்கு முரணான அல்லது நாட்டின் சட்டத்தை இழிவுபடுத்தும் எந்தவொரு வழக்கமோ அல்லது நடைமுறையோ, அரசியலமைப்புச் சட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற முடியாது.

எங்களைப் பொறுத்தவரை, கோயிலில் அர்ச்சகர்களாக நியமனம் செய்ய தகுதியானவர்கள் என சான்றளிக்கும் தந்திர வித்யாலயா முறை ஒரு முழுமையான செயல்முறையாகவே தோன்றுகிறது. பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்கள், கோயில் கடமைகளை மேற்கொள்வதற்கான அவர்களின் தயார்நிலையைக் குறிக்கும் வகையில், தீட்சை விழாக்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்.

மேலும், அத்தகைய தகுதி வாய்ந்த விண்ணப்ப தாரர்கள் கூட, இறுதித் தேர்வு மற்றும் முறையாக அமைக்கப் பட்ட குழுவால் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இதில் கற்றறிந்த அறிஞர்களைத் தவிர, ஒரு புகழ்பெற்ற தந்திரி குழுவும் அடங்கும். இந்தப் பின்னணியில், பாரம்பரிய அர்ச்சர்களின் கீழ் பயிற்சி பெற்ற நபர்களை மட்டுமே சாந்திகளாக நியமிக்க வேண்டும் என்ற மனுதாரர்களின் வாதத்தை நீதிமன்றம் நிராகரிக்கிறது என்று தீர்ப்பளித்தனர்.





சென்னை தெற்கு மாவட்டம் – வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, அயப்பாக்கம் ஊராட்சியில் பாகப் பொறுப்பாளர்கள் BLA2, BDA ஆலோசனைக் கூட்டம் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி தலைமையில் நடைபெற்றது. இதில் தொகுதிப் பார்வையாளர் பி.டி.பாண்டிச் செல்வம் பங்கேற்றுப் பேசினார். உடன் எஸ்.பி.அருள், ஜெயச்சந்திரன், கௌரி சங்கர், சங்கர், மாறன் குமார், இரா.வினோத், சதீஷ்குமார், சிவசங்கர், சுவாமிநாதன் மற்றும் மாவட்ட, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் தலைமையில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து அனைத்துத் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING

**தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, மாவட்ட துணை, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.**

### தேனி தெற்கு மாவட்டம்

தேனி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சையது உசேன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அ.திலீப்ராஜ்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேனி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட சத்தியசீலன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ரா.வீரபாண்டிய பிரபு அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேனி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட ராஜ் குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.முத்துலட்சுமி அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி

ஆண்டிபட்டி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட இளங்கோ அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக வீ.திலீபன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட வீ.திலீபன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக வே.அஜித்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட அஜித்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக சு.சுரேஷ் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சதீஷ் குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக சி.வாசுதேவன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கடமலை மயிலை வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கே.அழகர்சாமி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அ.அருண்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கடமலை மயிலை வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சூர்யபிரபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக பா.விஜயராஜன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கடமலை மயிலை தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ராஜமாணிக்கம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ரா.சதீஸ்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட பி. ஆகாஷ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக மு.சஞ்சய்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சி.சதீஷ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக த.ஜெயசூர்யா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட அருண் பாபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ர.விஜய் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட வீரபாண்டியபிரபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக வினோத்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

காமயகவுண்டன்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ஆனந்த் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ம.சிவக்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### கம்பம் சட்டமன்றத் தொகுதி

கம்பம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட திலிப் ராஜ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அ.சேக் அப்துல்லா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. விமலா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக திருமதி.விஜிதா சாமிகண்ணன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சின்னமனூர் கிழக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட B.செல்லபாண்டி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக மு.ஆனந்தன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட எம்.கோபிநாத் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக சூ.அருண்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பண்ணைப்புரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. ஜி.ரேணுகா தேவி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.வி.மதுபாலா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓடைப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட இளையராஜா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக பி.ராஜா அவர்கள் நியமிக்கப்படுகி றார்.

ஓடைப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. கே.முத்துலட்சுமி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.சரஸ்வதி அழகர்சாமி அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சின்னமனூர் நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கதிரேசன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ம.முகைதீன் அப்துல்காதர் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

புதுப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட எம்.கேசவன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ம.கார்த்திக் குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

புதுப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட பி.கார்த்திக் பிரபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ச.ராஜமுருகன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேவாரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கே.அரவிந்தன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ராஜா முகமது அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேவாரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) ராபின் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கௌதம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அஜித்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சுபாஷ் சந்திர போஸ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ரா.முகமது பிலால் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. வினோதினி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.பாத்திமா கனி அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சின்னமனூர் நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ஷேக் அப்துல்லா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக சு.சரவணன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கோம்பை பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட எஸ். பிரேம் குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக மா.ராஜ்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பண்ணைப்புரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட பி. நாகராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக ப.சரவணக்குமார் அவர்கள் நியமி க்கப்படுகிறார்.

பண்ணைப்புரம் பேரூர் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ஜே.ஜெய பிரகாஷ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக செல்வின்ராஜா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் வடக்கு நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி சி. சந்திரலேகா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக திருமதி.அ.சந்திரா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் தெற்கு நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.ரேவதி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக திருமதி.லாவண்யா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி